**வத்தளை பிரதேச சபை**
**கம்பஹா மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 22 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வத்தளை பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கை

நிலையான சொத்துக்களை கணக்கு வைப்பதற்குரிய கணக்கீட்டுக் கொள்கையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அதன் பிரகாரம் நிலையான சொத்துக்கள் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கட்டுநாயக்க அதிவேக வீதியை நிர்மாணிக்கும் போது உடைத்து அகற்றப்பட்ட இத்தமல்வத்த சனசமூக மண்டபம், காணி மற்றும் கட்டிடத்தின் கீழ் காண்பிக்கப்பட்டமையால் ரூபா 64,339 இனால் சொத்துக்கள் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) காணி மற்றும் கட்டிடம் பட்டோலையில் காண்பிக்கப்பட்ட 10 காணிகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பிரதேச சபை பிரதான அலுவலகத்தில் அமைக்கப்பட்டிருந்த ரூபா 48 இலட்சம் பெறுமதியான மின்பிறப்பாக்கி இயந்திரம் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.3 இணக்கஞ்செய்யப்படாத கணக்குகள்

(அ) நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற 06 சொத்து விடயங்களின் மீதிகளுக்கும் அவற்றுக்குரிய உபயோகப் பதிவேடுகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 66,551,608 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொதுக் களஞ்சிய இருப்பு மீதி ரூபா 4,438,025 ஆக இருந்த போதிலும், அத்திகதியில் உள்ளவாறு இருப்பு மெய்மையாய்வின் அறிக்கையின் பிரகாரம் மீதி ரூபா 3,052,292 ஆனமையால் ரூபா 1,385,733 வேறுபாடு காணப்பட்டது.

**1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

திக்ஓவிட்ட உயிரியல் வாயுப் பிரிவிற்கு கழிவுப்பொருள் முகாமைத்துவ அதிகாரசபையிலிருந்து சேர்க்கப்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தருக்கு சம்பளமாக 2012 ஒக்தோபர் மாதம் ரூபா 25,000 தொகை சபையால் செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2018 ஏப்ரல் 12 ஆந் திகதி வரையிலும் அந்த நிறுவனத்திலிருந்து பணம் மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

(i) 2016 ஆம் ஆண்டில் நிலுவை ஆதனவரி சேகரித்தலுக்காகச் செலுத்த வேண்டிய தரகுப் பணமாக பெயர் குறிப்பிட்ட இரண்டு உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 157,012 தொகை செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) 2013 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டு வரப்படுகின்ற இலங்கை பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 64,774 தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) நீர் வேலைகள் களஞ்சியமாக பெயரிடப்பட்ட இனங்காணப்படாத ரூபா 729,708 தொகையான மீதியொன்று 2008 ஆம் ஆண்டு முதல் தீர்த்து வைக்கப்படாமல் முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

**1.3.5 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

மீதி உறுதிப்படுத்தல் மற்றும் ஆவணச் சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 149,364,875 கூட்டுமொத்தமான 10 கணக்கு மீதிகளை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 219 ஆம் பிரிவிற்கு இணங்காத வகையில் சபையின் உறுப்பினரின் மனைவிக்கு விழா மண்டபம் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2009 மே 30 ஆந் திகதி முதல் அந்த விழா மண்டபத்திலிருந்து ரூபா 774,800 தொகை அறவிட வேண்டியிருந்தது.

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 78,739,806 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 80,472,115 ஆக இருந்தது.

## 2.2 நிதிக் கட்டுப்பாடு

சபையின் நிதியம் உச்ச அளவில் நலன் பெறக்கூடிய பிரகாரம் திட்டமிடப்பட்டு பிரதேசத்தின் மக்களுக்கு செலவிடுதல் சபையின் நோக்கமாக இருந்த போதிலும் 36 நிலையான வைப்புக்களில் ரூபா 144.1 மில்லியன் தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தது.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 75,300,000 | 80,694,386 | 91,680,253 | 66,553,360 | 77,850,000 | 79,874,262 | 98,345,136 | 77,539,227 |
| வாடகை | 5,372,100 | 4,714,085 | 4,897,709 | 6,545,445 | 5,026,500 | 5,544,477 | 6,234,084 | 6,729,069 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 3,225,000 | 3,978,855 | 5,022,660 | - | 3,410,000 | 3,488,963 | 3,690,423 | 1,043,805 |
| ஏனைய வருமானம் | 240,215,500 | - | 241,905,893 | - | 203,982,500 | - | 249,769,417 | - |

### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

முன்னைய ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 358.03 மில்லியனுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 343.50 மில்லியன் வரை ரூபா 14.53 மில்லியனால் குறைவடைந்திருந்தது.

### 2.3.3 வீதவரியும் வரியும்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 66,553,360 தொகையான நிலுவை ஆதனவரி மீதியில் 01 வருடம் முதல் 05 வருடங்கள் வரை ரூபா 36,994,450 தொகையும், 05 வருடங்கள் முதல் 10 வருடங்கள் வரை ரூபா 14,418,036 தொகையும் மற்றும் 10 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 15,140,874 தொகையும் உள்ளடங்கியிருந்ததுடன் இந்த வருமானங்களை அறவிடுவதற்கு சபையினால் போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 கடை வாடகை

கெரவலபிட்டி சந்தைத் தொகுதியில் 27 கடைகளிலிருந்து ரூபா 4,139,748 தொகையான கடை வாடகை 2012 ஆம் ஆண்டு முதல் நிலுவையாகக் காணப்பட்டதுடன் அந்த நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.5 அனுமதிப் பத்திரக்கட்டணம்

வியாபார நிலைய உரிமையாளர்களிடமிருந்து பணம் பெற்று பற்றுச்சீட்டு விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும், வியாபார அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படாதிருந்த சில சந்தர்ப்பங்கள் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

### 2.3.6 ஏனைய வருமானம்

#### (அ) சுற்றாடல் அனுமதிப்பத்திரம்

சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற மர ஆலைகள், இயந்திரமயமான தச்சுத் தளங்கள், ஓய்வு விடுதிகள், எரிபொருள் நிரப்பும் நிலையம், அரைக்கும் ஆலைகள், அச்சகங்கள், எண்ணெய் ஆலைகள் மற்றும் விழா மண்டபங்கள் என்பவற்றை உள்ளடக்கிய ஏனைய வியாபார நிறுவனங்கள் கட்டாயமாக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற வேண்டியிருந்த போதிலும், சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள 05 நிறுவனங்கள் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கவில்லை.

#### (ஆ) அறிவித்தல் பதாதை வருமானம்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 122 மற்றும் 126 ஆம் பிரிவுகள் மற்றும் 2015 திசெம்பர் 28 ஆந் திகதிய 1947/6 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1952 இன் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (அங்கீகரிக்கப்பட்ட உப விதி) அதிகாரச்சட்டத்தின் 01 ஆம் பட்டோலையின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்திற்குரிய பிரதேசத்தில் உள்ள சகல அறிவித்தல் பதாதைகளில் இருந்தும் கட்டணம் அறவிட வேண்டியிருந்த போதிலும், பத்து அறிவித்தல் பதாதைகளிலிருந்து கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

#### (இ) தொலைத்தொடர்பு கோபுர வருமானம்

(i) இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட பட்டியலின் பிரகாரம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சபை அதிகாரப் பிரதேசத்திற்குரிய சகல தொலைபேசி கோபுரங்களையும் இனங்கண்டு 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் V ஆவது பட்டோலையின் V ஆவது பிரிவின் பிரகாரம் வருமானம் சேகரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், வெலிசற உப அலுவலக அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற தொலைபேசி கோபுரங்களிலிருந்து வருமானம் எதுவும் சேகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் தொலைபேசி கோபுரங்களில் பொருத்தப்பட்ட போட்டி மாற்ற உபகரணங்களுக்குரிய நிறுவனங்களிலிருந்து வியாபார வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதி**

-----------------

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 15 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உபவிதி விதிக்கப்பட்ட வேண்டிய போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 12 விடயங்களுக்காக மாத்திரமே உபவிதி விதிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

-----------------------------------------------

விதிக்கப்பட்டுள்ள உப விதியின் பிரகாரம் சபையினால் நிறைவேற்ற வேண்டிய இலக்குகளுக்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதும், 2017 ஆம் ஆண்டில் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 04 செயற்பணிகளை நிறைவேற்றுவதற்கு தவறியிருந்தது.

**(இ) எதிர்பார்த்த நலன்கள் பெறப்படாமை**

------------------------------------------------------------

ஹெந்தல உப அலுவலகத்திற்குரிய 08 கடைகள் 2007 ஆம் ஆண்டு முதல் எதிர்பார்த்த நலன்களைக் கைப்பற்றிக் கொள்ளாமல் காணப்பட்டது.

**(ஈ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

-----------------------------------------------------

(i) 2008 யூலை 30 ஆந் திகதிய 1560/06 ஆம் இலக்க வர்த்தமானிப் பத்திரத்தின் 18(1) இன் பிரகாரம் வருடாந்த பாதீட்டில் கழிவுப்பொருட்களை வீட்டுக்கு வீடு சேகரிக்கும் செலவினங்களைத் தீர்த்துக் கொள்வதற்கான கட்டணம் நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மேலே குறிப்பிடப்பட்ட வர்த்தமானி பத்திரம் மற்றும் 2008 பெப்ரவரி 01 ஆந் திகதிய 1534/18 ஆம் இலக்க வர்த்தமானியின் பிரகாரம் கழிவுப்பொருள் வரி அல்லது கட்டணம் விதிக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

---------------------------------------------------------

நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைந்து கொள்வதற்காக சபையினால் பின்வரும் செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(i) உள்ளூராட்சி நிறுவன அதிகாரப் பிரதேசத்தில் குடியிருப்பாளர்களின் வறுமையை இல்லாதொழிப்பதற்காக சுய வேலைவாய்ப்பு திட்டமாக குறைந்த வருமானம் பெறும் 25 குடும்பங்களுக்கு 2017 மே 26 மற்றும் யூன் 09 ஆந் திகதிகளில் பாதணி உற்பத்தி தொடர்பான பயிற்சி வழங்கி திசெம்பர் 08, 09 மற்றும் 10 ஆந்திகதிகளில் சபை வளவில் பாதணி விற்பனைச் சந்தையொன்றும் நடாத்தப்பட்டிருந்தது. இதற்காக ரூபா 150,000 தொகையொன்று மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்தது.

(ii) சபை நிதியத்திலிருந்து ரூபா 7,500 செலவில் மரங்கள் வளர்த்தல் மற்றும் வீட்டுத் தோட்ட பயிர்ச் செய்கை தொடர்பான நிகழ்ச்சித்திட்டமொன்று 2017 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

(iii) குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களில் பாடசாலைப் பிள்ளைகளுக்கு பாதணிகளை வழங்குவதற்காக ரூபா 392,974 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்**

2012 முதல் 2014 திசெம்பர் வரை கொள்வனவு செய்யப்பட்டு பாவனைக்கு எடுக்கப்படாத களஞ்சிய பொருள் இருப்பொன்று களஞ்சியத்தில் காணப்பட்டதுடன் அவ்வாறான பொருட்களை இனங்கண்டு களஞ்சியத்திலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

**(அ) ஊழியர் வெற்றிடமும் மிகையும்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு இருந்தது.

| தரம் | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளபடியான | வெற்றிடம் |
|---|---|---|---|
| நிறைவேற்று தரம் | 02 | 02 | - |
| மூன்றாம் நிலை | 01 | 01 | - |
| இரண்டாம் நிலை | 59 | 54 | 05 |
| ஆரம்ப நிலை | 142 | 116 | 26 |
| அ.நி.சு 25/2014 இன் பிரகாரம் | 47 | 46 | 01 |
| | 251 | 219 | 32 |

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் நூலகர் பதவியொன்று, 03 வருமான கட்டுப்பாட்டாளர் பதவிகள், முன்பள்ளிப் பாடசாலை பதவியொன்று, 06 சாரதி பதவிகள், 07 சுகாதாரத் தொழிலாளர் பதவிகள், 09 வேலைக்கள தொழிலாளர் பதவிகள் மற்றும் 03 அலுவலக உதவியாளர் பதவிகள் என்பன வெற்றிடமாகக் காணப்பட்டன.

(ஆ) 15 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாது காணப்பட்ட ரூபா 94,380 தொகையான ஊழியர் கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 செயற்பாட்டு செயற்றிறனின்மைகள்**

சபைக்குரிய மூன்று உப அலுவலகங்களிலும் ஆதனவரி ஆதனங்கள் 2008 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்டு 09 வருடங்கள் அளவில் கடந்திருந்தமையால் ஆதனங்களின் தற்போதைய பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டை திருத்துவதற்கு சபை தவறியமையினால் சபை அதிகாரப் பிரதேசத்தில் 57,113 ஆதனவரி அலகுகளிலிருந்து அறவிடக்கூடிய நாளதுவரையான வரி அளவை அறவிட முடியாதிருந்தது.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 சொத்துக்கள் பதிவேடுகளுக்குக் கொண்டுவராமை**

நிதிக்கூற்றுக்களில் 03 மோட்டார் சைக்கிள்கள் எனக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், பௌதீக சொத்துப் பரீட்சிப்பின் போது 02 மோட்டார் சைக்கிள்கள் மாத்திரம் காணப்பட்டன.

### 3.5.2 பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல்கள் இடம்பெறாமை

சபைக்குச் சொந்தமான கெப் வண்டி மற்றும் கை ரெக்ரர் என்பன வாகனத் தளத்தில் துருப்பிடிக்கும் நிலையில் நீண்ட காலமாகக் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டதுடன் அந்த வாகனங்களை பொருத்தமான பிரகாரம் பழுதுபார்ப்பதற்கோ அல்லது விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5.3 கையேற்கப்படாத சொத்துக்கள்

சபைக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்களுக்குரிய உரித்துறுதி அல்லது கையளித்தல் கட்டளை மற்றும் நில வரைபடம் என்பன பெறப்படாதிருந்ததுடன் 19 ஆதனங்கள் மற்றும் ஆதனங்களின் உரித்து என்பவற்றைத் தீர்த்து வைத்து உரித்துறுதி தயாரிக்கப்படாமல் 30 காணிகள் ஹந்தகல உப அலுவலகத்திலும், அவ்வாறான 27 ஆதனங்கள் வெலிசற உப அலுவலகத்திலும் மற்றும் 16 ஆதனங்கள் பமுனுகம் உப அலுவலகத்திலும் காணப்பட்டன.

### 3.5.4 சொத்துக்களின் உரித்தை நீக்குதல்

1988 ஆம் ஆண்டின் போது அகறதகுறு ஹிமிபானோ வினால் ரூபா 188,000 பெறுமதியின் அடிப்படையில் நன்கொடை உரித்துறுதியினால் வத்தள பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்ட 11 ஏக்கர்கள் 02 றூட் 11 பேர்ச் அளவான பாரிய உஸ்வெட்ட கெய்யாவ பார்ஸ் வத்த காணி, 1991 ஆம் ஆண்டின் போது 57 காணிக் கூறுகள் அல்லது அதற்கு அண்மித்த எண்ணிக்கையில் பிரித்து நன்கொடை உரித்துறுதி மூலம் காணி உரித்தற்றதாக்கப்பட்டிருந்தது.

### 3.5.5 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கொங்கிறீட் கலவை இயந்திரம் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் பிரதான அலுவலகத்தில் காணப்பட்டது.

(ஆ) பெறுமதி இனங்காணமுடியாத சபைக்குச் சொந்தமான 08 வருடங்கள் பழைய 05 வாகனங்கள் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டன.

### 3.6 பெறுகைகள்

#### வருடாந்த பெறுகைத் திட்டம்

2006 சனவரி 25 ஆந் திகதிய தேசிய பெறுகைகள் முகவராண்மை சுற்றறிக்கை இலக்கம் 8 இல் 4.2.1 (ஏ) மற்றும் (சீ) இன் பிரகாரம் பிரதான பெறுகைத் திட்டம் மற்றும் வருடாந்த விரிவான திட்டம் என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

#### பாதீட்டுக் கட்டுப்பாடு

06 செயற்திட்டங்களுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 49,500,000 மொத்த நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|
| (அ) வருமான நிர்வாகம் | (i) நாளதுவரையாக ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்படாமை. |
| | (ii) நிலுவை வருமானத்தைச் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| | (iii) புதிய வருமான மூலங்களை இனங்கண்டு வருமானம் சேகரிக்கப்படாமை |
| (ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) மதிப்பீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடு பயன்படுத்தப்படாமை |
| | (ii) மிகை ஒதுக்கீடுகள் செய்யப்பட்டமை. |
| (இ) சொத்துக்கள் முகாமைத்துவம் | (i) உரித்துறுதி பெறப்படாமை. |
| | (ii) சொத்துக்கள் தொடர்பான பதிவேடு பேணப்படாமை |
| | (iii) கிரயம் இன்றிய நிலையான சொத்துக்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு வைக்கப்படாமை |
| (ஈ) கழிவுப்பொருள் முகாமைத்துவம் | (i) கழிவுப்பொருட்களைச் சேகரித்தல் மற்றும் அகற்றுதல் தொடர்பாக மக்களுக்கு தெளிவுபடுத்தாமை |
| | (ii) கழிவுப்பொருள் வரி அறவிடப்படாமை. |